


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.11.2024) தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில், கோயம்புத்தூர், விளாங்குறிச்சியில் 158 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் 2.94 இலட்சம் சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி பி.ராஜ்குமார், கே.ஈஸ்வரசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், டிட்கோ மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் இரா.கண்ணன், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சமூக வலைதளங்களில் வலம் வருவது!




### தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில்

# வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.-2) கூட்டம்!

### மாவட்டச் செயலாளர், அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி, நவ. 6-

தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி பெருவெற்றி பெறவேண்டும் என்று தி.மு.க. தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்கள் அறிவித்துள்ளார். தேர்தலுக்கான பணிகள் இப்போதிலிருந்தே துவங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். 234 தொகுதிகளுக்கும் தொகுதி பார்வையாளர்களை நியமனம் செய்துள்ளார்.



தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் தேர்தல் பணிகள் துவங்கும் விதமாக முதல்கட்டம் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கூட்டம் ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஒன்றிய வாரியாக நவம்பர் 5, தொடங்கி இன்று (6 தேதி) நடைபெறுகிறது.

இக்கூட்டங்களில் தொகுதி பார்வையாளர், மற்றும் நிச்சயிக்கப்பட்டுள்ள மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இதில் தொகுதி பார்வையாளர் டாக்டர் சி.சுரேஷ்,

திருமதி. அ.பிரம்மசக்தி எஸ்.அருணாச்சலம்,

சா.ஆறுமுகப்பெருமாள் ஜெ.ஜெயக்குமார் ரூபன்,

திருமதி.ஜெ.ஜெபதங்கம் பிரேமா, ஏ.எஸ்.ஆறுமுக பாண்டியன், எல்.ரகுராமன், த.கணேசன்,

**06.11.2024 புதன்கிழமை**

மாலை 5.00 மணி - ஸ்ரீவைகுண்டம் கிழக்கு ஒன்றியம், ஏரல் பேரூராட்சி - ஒன்றிய கழக அலுவலகம், முக்காணி.

மாலை 6.00 மணி - ஸ்ரீவைகுண்டம் மத்திய ஒன்றியம், சாயர்புரம், பெருங்குளம் பேரூராட்சிகள், ஒன்றிய கழக அலுவலகம், சாயர்புரம்.

இரவு 7.00 மணி - ஸ்ரீவைகுண்டம் மேற்கு ஒன்றியம், ஸ்ரீவைகுண்டம் பேரூர் ஒன்றிய கழக அலுவலகம், ஸ்ரீவைகுண்டம்.

இரவு 8.00 மணி- கருங்குளம் தெற்கு ஒன்றியம், ஒன்றிய கழக அலுவலகம், செய்துங்கநல்லூர்.

இவ்வாறு அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மக்களுக்கான அரசாக செயல்படுகிறது!

# ‘திராவிட மாடல்’ அரசின் நீளும் சாதனை திட்டங்கள்!

### ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, நவ. 6-

திராவிட மாடல் அரசின் சாதனை திட்டங்களின் பட்டியல் நீள்கிறது என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

இதுகுறித்து 5.11.2024 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-

இந்திய பொருளாதாரத்தில் தமிழகத்தின் 9 சதவீத பங்களிப்பு என்பது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை காட்டுகிறது. தேசத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) பங்களிப்பு செய்வதில் தமிழகம் 2ம் இடத்தை பிடித்துள்ளது. நாட்டின் வளர்ச்சி விகிதம் 7.24 சதவீதமாக இருக்கும் நிலையில் மாநிலத்தின் வளர்ச்சி விகிதம் 8.19 சதவீதமாக உள்ளது. தொழில் முதலீட்டுக்கு ஏற்ற சூழலை திமுக அரசு உருவாக்கி தந்ததாகவும், இதன் மூலம் நாட்டிலேயே 14வது இடத்தில் இருந்த தமிழகம் 3வது இடத்தை பிடித்துள்ளதாக நடுநிலையாளர்கள் பாராட்டி வருகின்றனர்.

பெண்கள், இளைஞர்கள், மாற்றுத்திறனாளிகள், விளிம்பு நிலையில் உள்ளவர்கள், ஒடுக்கப்பட்டோர் என அனைவரும் தங்களது வாழ்க்கை தரத்தை உயர்த்த அரசு எடுத்த நடவடிக்கைகளால் அவர்களது நிலை மேம்பட்டுள்ளது. கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின்


தினகரன்
நவம்பர் 5, 2024 செவ்வாய்க்கிழமை
**நீளும் சாதனை திட்டங்கள்**
இந்திய பொருளாதாரத்தில் தமிழகத்தின் 9 சதவீத பங்களிப்பு என்பது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை காட்டுகிறது. தேசத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) பங்களிப்பு செய்வதில் தமிழகம் 2ம் இடத்தை பிடித்துள்ளது. நாட்டின் வளர்ச்சி விகிதம் 7.24 சதவீதமாக இருக்கும் நிலையில் மாநிலத்தின் வளர்ச்சி விகிதம் 8.19 சதவீதமாக உள்ளது. தொழில் முதலீட்டுக்கு ஏற்ற சூழலை திமுக அரசு உருவாக்கி தந்ததாகவும், இதன் மூலம் நாட்டிலேயே 14வது இடத்தில் இருந்த தமிழகம் 3வது இடத்தை பிடித்துள்ளதாக நடுநிலையாளர்கள் பாராட்டி வருகின்றனர். பெண்கள், இளைஞர்கள், மாற்றுத்திறனாளிகள், விளிம்பு நிலையில் உள்ளவர்கள், ஒடுக்கப்பட்டோர் என அனைவரும் தங்களது வாழ்க்கை தரத்தை உயர்த்த அரசு எடுத்த நடவடிக்கைகளால் அவர்களது நிலை மேம்பட்டுள்ளது.

கீழ் ஒவ்வொரு மாதமும் 1,15,16,292 பெண்கள் ரூ.1,000 பெறுகிறார்கள். பேருந்து பயண திட்டத்தின் கீழ் பெண்கள் 445 கோடி முறை அரசு பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்துள்ளனர். மக்களை தேடி மருத்துவம் திட்டம் மூலம் 1 கோடி பேர் பயனடைந்துள்ளனர்.

கல்வி துறையில் தமிழகம் 2வது இடத்துக்கு முன்னேறி உள்ளது. 16 லட்சம் மாணவர்கள் தமிழக முதல்வரின் காலை உணவு திட்டத்தில் பயன் பெற்றுள்ளனர். அரசு மற்றும் அரசு உதவி பெறும் 20,332 பள்ளிகளில் இணையதள வசதி, ரூ.519.73 கோடியில் உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய ஆய்வகங்கள், 22,931 ஸ்மார்ட் வகுப்பறைகள், புதுமைப்பெண், நான் முதல்வன் திட்டங்களால் உயர்கல்வியில் சேரும் பெண்கள், மாணவர்கள் எண்ணிக்கை தொடர்ந்து உயர்வு என சாதனை திட்டங்களின் பட்டியல் நீள்கிறது.

அந்த வரிசையில் சென்னை கொளத்தூர் தொகுதியில் ‘முதல்வர் படைப்பகத்தை’ முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். சென்னை கொளத்தூர் அகரம், ஜெகந்நாதன் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி பன்னோக்கு மையத்தில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் (சிஎம்டிஏ) சார்பில் முதல்வரின் சட்டசபை உறுப்பினர் மேம்பாட்டு நிதியை கொண்டு ‘முதல்வர் படைப்பகம்’ என்ற பெயரில் கோவொர்க்கிங் ஸ்பேஸ் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த படைப்பகத்தில் வருகின்றவர்களுக்கு படிப்பதற்கென்று ஒரு தளமும், பணியாற்றுவதற்கு என்று ஒரு தளமும், உணவு அருந்துவதற்கு ஒரு தளமும் என 3 தளங்கள் உள்ளன. ஒரே நேரத்தில் 51 பேர் படிக்கும் அளவுக்கு இடவசதி உள்ளது. அவர்களுக்கு தேவையான புத்தகங்களை கொண்ட ஒரு நூலகமும் அமைக்கப்பட உள்ளது. இதற்கு ரூ.5 மற்றும் ரூ.10 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இலவசமாக அனுமதிக்கப்பட்டால் பொழுதுபோக்கு கூடமாக மாறிவிடக்கூடும் என்பதற்காக இந்த குறைந்தபட்ச கட்டணம் பெறப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணி செய்வதற்காக கோஓர்க்கிங் ஸ்டேஷன் எனப்படும் ஒரு தளம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 38 நபர்கள் ஒரே நேரத்தில் பணியாற்றலாம். மேலும், இதில் 3 கலந்தாய்வு கூடங்கள் அமைக்கப்படுகின்றன. கலந்தாய்வு கூடங்களில் இரண்டில் தலா 4 பேரும், ஒன்றில் 6 பேரும் அமர்ந்து பணியாற்ற முடியும்.

கோஓர்க்கிங் ஸ்பேஸ் பெரிய பெரிய நிறுவனங்களுக்கு வழங்கப்படாது என்றும், பொருளாதாரத்தில் சாதாரண நிலையில் இருக்கும் நிறுவனங்களுக்கு இந்த பணியிடத்தை பகிரவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கும் குறைந்தளவு கட்டணம் நிர்ணயிக்கப்பட உள்ளது. மேலும், பெண்கள் கணினி கற்பதற்காக, அனிதா பெயரில் கொளத்தூரில் தொடங்கப்பட்ட மையத்தில், 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பலன் அடைந்துள்ளனர். மக்களுக்கான திட்டங்களை தீட்டி, மக்களுக்கான அரசாக செயல்படுகிறது என்பதில் மாற்று கருத்துக்கு இடமில்லை.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மக்களை வதைக்கும் நாடு முழுவதும் உள்ள

# சுங்கச்சாவடிகளை அகற்ற அனைவரும் ஒன்றுபட வேண்டும்!

### மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. அழைப்பு !

சென்னை,நவ.6-

தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் தமது எக்ஸ் தளத்தில் கூறியதாவது:-

அக்டோபர் 2024 நிலவரப்படி, தமிழ்நாட்டில் தற்போது 64 சுங்க கட்டணசாவடிகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

நாடு முழுவதும் சுங்கச்சாவடிகளை ஒழிப்பது தொடர்பாக நாடாளுமன்றத்தில் நான் எழுப்பிய சிறப்பு கவன ஈர்ப்பு கேள்விக்கு பதிலளிக்கையில் மத்திய இணை அமைச்சர் ஹர்ஷ் மல்ஹோத்ரா

இந்த தகவலைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நான் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது அமைச்சருக்கு, அதிகாரிகளால் போதிய ஆலோசனைகள் வழங்கப்படவில்லை என்பது ஆச்சரியமளிக்கிறது.

அமைச்சரின் எழுத்துப்பூர்வ பதிலில், 1997 ஆம் ஆண்டின் முந்தைய தேசிய நெடுஞ்சாலை கட்டண விதிகளில் அறுபது கிலோமீட்டர் தூரம் குறித்து எந்த அளவுகோலும் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

இது 1997 விதிகளைப் பற்றிய தவறான புரிதலைக் குறிக்கிறது. இந்த விதியானது உண்மையில் இரண்டு சுங்கச்சாவடிகளுக்கு இடையில் 80 கி.மீ தூரத்தை குறிப்பிடுகிறது.

மேலும், ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி, 60 கி.மீ சுற்றளவில் சுங்கச்சாவடிகள் அனுமதிக்கப்படாது என்று நாடாளுமன்றத்தில் தவறுதலாக அறிவித்து விட்டார் என்பதை இது குறிக்கிறதா?

சென்னையில் உள்ள பரனூர் சுங்கச் சாவடியில் சாலை பயனர்களுக்கு 2008 கட்டண விதிகளின் விதி 6 இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பலன்களை மறுப்பது அநீதியானது. இது சுங்க கட்டணங்களில் 60 சதவீதம் குறைக்க அனுமதிக்கிறது, இதனால் 40 சதவீதம் குறைக்கப்பட்ட விகிதத்தில் கட்டணம் வசூலிக்க உதவுகிறது.

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையமானது பரனூரில் செய்த முதலீட்டை விட ரூ.28.54 கோடி கூடுதல் இலாபம் ஈட்டியுள்ளது



என்பதையும், விதிகளின் படி சுங்கக் கட்டணத்தைக் குறைக்கத் தவறிவிட்டது என்பதையும் அமைச்சர் ஒப்புக்கொள்கிறார்.

அதுமட்டுமின்றி, வசூல் செய்யப்பட்ட அதிகப்படியான நிதியானது இந்தியாவின் ஒருங்கிணைந்த நிதியில் டெபாசிட் செய்யப்படுகிறது என்பதும், அது தேசிய நெடுஞ்சாலைகளை மேலும் மேம்படுத்துவதற்கும் விரிவாக்குவதற்கும் ஒதுக்கப்படுகிறது என்ற விளக்கமும் மிகவும் கேள்விக்குரியது.

இந்த நடைமுறையானது சுங்கச்சாவடி கட்டணம் குறித்து நிறுவப்பட்ட சட்டங்களை மீறுவதாகவும், பொது நிதியை தவறாகப் பயன்படுத்துவதாகவும், சாலை பயனர்களின் செலவில் ஒரு சிலருக்கு பயனளிப்பதாகவும் தெரிகிறது. மேலும், இந்த முதலீடுகள், செலவுகள் மற்றும் வசூல்களை மறுஆய்வு செய்ய சுயாதீன தணிக்கை ஆணையம் என்று எதுவும் இல்லை.

கட்டண விதிகள் பெரும்பாலும் நெகிழ்வான விதிமுறைகளுடன் ஒப்பந்தக்காரர்களுக்கு சாதகமாக உள்ளன என்பது அனைவரும் அறிந்ததே.. அதே நேரத்தில் பொது மக்கள் அத்தகைய அநீதியான சட்டத்தின் கீழ் நியாயமற்ற தொகையை செலுத்த நிர்பந்திக்கப்படுகிறார்கள்.

எனவே, இந்த அநியாயமான சுரண்டலுக்கும், கொள்ளைக்கும் அஞ்சி நாம் நம் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கும் ஒரு நாள் வரலாம்.

இந்த நியாயமற்ற சுங்கச்சாவடி கட்டணங்களை எதிர்க்கவும், நாடு முழுவதும் சுங்கச்சாவடிகளை அகற்றவும் நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.





விருதுநகரில் தெற்கு வடக்கு தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மாவட்ட தலைவர்கள் தங்கராசு, செல்வமணி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் ராணி ஸ்ரீகுமார் எம்.பி., தனுஷ் குமார், பவானி ராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், தங்கப்பாண்டியன், வி.பி.ராஜன், குன்னூர் சீனிவாசன், சாகுல் ஹமீது, வனராஜ், ஆர்.வி.கே.துரை, கே.வி.கே.ஆர்.பிரபாகரன், ராஜா அருள்மொழி, உதயசூரியன், சங்கிதா இன்பம், சுந்தரலட்சுமி சிவப்பிரகாசம், திருச்சுழி பொன்னுத்தம்பி, கடற்கரை ராஜ், கண்ணன், வத்ராப் முனியாண்டி, மல்லி ஆறுமுகம், விவேகராஜன், தங்கராஜ், முருகேசன், செல்வம், கே.ஜி.ராஜகுரு, கிருஷ்ணகுமார், பாபுஜி, சூரிய நாராயணன், ஆர்.பி.மதியழகன், சுதாகர், மல்லாங்கிணறு போஸ், நகரச் செயலாளர் விருதுநகர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், ஏ.கே.மணி, செந்தில், காளிராஜன், நேஷனல் ராமர், திருமாறன், ராஜசெல்வம், சரஸ்வதி, சுமதி ராமமூர்த்தி, வகிதா ரகுமான் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



மதுரை யா.ஒத்தக்கடையில் தி.மு.க. சட்டத்துறை சார்பில் நடைபெற்ற தென் மண்டல ஆலோசனைக் கூட்டத்தில் சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் பேசினார். உடன் மண்டல பொறுப்பாளர்கள் ராதாகிருஷ்ணன், வழக்கறிஞர் கலாநிதி மற்றும் வழக்கறிஞர் அணி மாநில, மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர், துணைத் தலைவர் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.